1979 ஏப்ரல் 16]

சொல்லப்படுகிறது. அது போன்றவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லுகிறார்கள் என்று சொன்னால், அதற்கும் இந்த விதி முறைகள் உண்டா, இல்லையா, அல்லது அவர்களுக்கு வேறு எந்த விதிகள் விதிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கிருந்து வெளிநாடுகளுக்கு போகின்ற பணியிலிருக்கின்ற மருத்துவர்களுக்கு பல்வேறு விதமான விதிமுறைகளை வைத்திருக்கிறோம். பணியில் இல்லாதவர்கள் வெளிநாடுகளுக்கு மேல்படிப்புக்குச் செல்ல வேண்டுமென்றால், அப்படி செல்லுகின்றவர்கள், எந்த நாடுகளுக்கு செல்லுகின்றார்கள், எவ்வளவு நாட்களுக்குச் செல்லுகின்றார்கள். பயிற்சி முடிந்து இங்கு வந்த பின்னால் எவ்வளவு காலம் இங்கே வந்து பணியாற்ற வேண்டும் என்கின்ற சில விதிமுறைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றவர்கள் அங்கேயே தங்கி விடாமல் மீண்டும் இங்கு வந்து பணியாற்ற வேண்டும் என்பதற்காக அவர்களிடமிருந்து ஷ்யூரிட்டி என்ற அளவில் 50 ஆயிரம் ரூபாய் ஷ்யூரிட்டியை இந்த அரசு பெற்று வருகிறது.

சென்னை பொது மருத்துவமனை இருதய சிகிச்சைப் பிரிவு.

* வினா எண். 712—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இந்த ஆண்டு (1978) அக்டோபர் மாதத்தில் சென்னை பொது மருத்துவமனையில் இருதய சிகிச்சைப் பிரிவில் நூதனக் கருவிகளைக் கொண்ட சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்குண்டான செலவு எவ்வளவு ?

(இ) இது போன்ற பிரிவுகளை மதுரை, கோவை, செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலும் விரிவுபடுத்த உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்,

(ஆ) சுமார் ரூ. 5,77,973/- ஆகும். (ரூபாய் ஐந்து இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து மூன்று மட்டும்).

(இ) மதுரையில் இருதய சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டிய மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து தகுந்த செயற் குறிப்புகள் கோரப்பட்டுள்ளன. இது போன்ற பிரிவுகளை கோவை, செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் விரிவுபடுத்தும் எந்த செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, செங்கற்பட்டு போன்ற இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவ மனைகளில் இருதய சிகிச்சைப் பிரிவில் நூதனக் கருவிகளைக் கொண்ட சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்க செயற்குறிப்புகள் கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அதிகமாக அடிக்கடி இந்நோய் தாக்கப்படுவதின் காரணத்தினால் எவ்வளவு காலத்தில் இதைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது? அதற்கு எவ்வளவு காலக் கட்டம் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே தற்பொழுது இருதய நோயால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதில் மிகவும் முன்னேற்ற மான சில கருவிகள் விலை உயர்ந்தவையாக உள்ளன. அவைகள் இப்பொழுது சென்னையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான கருவிகள் மதுரையில் வைக்கப்படுவதற்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. ஏனைய மருத்துவமனைகளில் இது போன்ற இயந்திரங்கள் வைக்க செலவு அதிகமாக ஆகின்ற காரணத்தினால், இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இருதய நோய்ப்பிரிவு ஏற்படுத்தப்பட்ட பிறகு சென்னையில் இருக்கிற மருத்துவ மனையில் எத்தனை பேர்கள் சிகிச்சைப் பெறுகிறார்கள்? அதுபோன்று நடமாடும் இருதயநோய் சிகிச்சைப் பிரிவு சென்னையில்? இருக்கிறது. அதை மற்ற இடங் களிலும் விரிவுபடுத்தி, எல்லா கிராமங்களிலும் உள்ள மக்க ளுக்கும், திடீர் என்று இந்த நோயினால் தாக்கப்படுகின்ற அனைவருக்கும் இந்த சிகிச்சையை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் எவ்வளவு பேர்கள் சிகிச்சைப் பெறுகிறார்கள் என்று கேட்ட கேள்விக்கு, ஒரு தனி மருத்துவ மனையைப் பொறுத்த வரையில் இருக்கிறது, ஆகவே இதை தனிக் கேள்வியாகப் போட்டால், பதிலை சேகரித்துக்

1979 ஏப்ரல் 16]

கொடுக்க சுலபமாக இருக்கும். அடுத்து, நடமாடும் இதய சிகிச்சைப் பிரிவு ஏனைய இடங்களில் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டார். நல்ல யோசனைதான். ஆனால், அத்தகைய நடமாடும் மருத்துவ மனைகளில், இருதய சிகிச்சைப் பிரிவை ஒவ்வொரு இடத்திலும் உருவாக்க வேண்டும் என்றால் அதற்கு ஏற்படுகிற பணச் செலவு மிக அதிகமாக இருக்கும். ஆனாலும் தமிழகத்தில், முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள், எல்லா மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு இந்தப் பயன்கள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இதை படிப் படியாக நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இருதய சிகிச்சைப் பிரிவு என்பது ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பொழுது இயங்கி வருகிறதா ? குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு மருத்துவ மனையில் இது போன்ற சிகிச்சைப் பிரிவு—கிரிஸ்டியன் மெடிகல் காலேஜ் ஆஸ்பத்திரியில்தான் அந்த பிரிவுகள் இருக்கின்றன. இந்த சிகிச்சைப் பெற வேண்டுமென்றால் 20,000 ரூபாய் வரைக்கும் செலவிட வேண்டிய நிலையில் இருப்பதனால் இந்த நோய் தாக்கப்பட்டால், ஏழை எளியவர்கள், அந்தப் பலனை அடைய முடியாது, சிகிச்சைப் பெற முடியாத அளவிலே பாதிக்கப்பட்டு இறந்து விடுகின்றனர். அவர்களைக் காப்பாற்றுவதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன். அதேபோன்று தனியார் மருத்துவ மனையில் அதிக மாகப் பில் போடுகிறார்கள், அதைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது முடிவு எடுக்குமா அல்லது அதில் ஒரு பகுதியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி ஓபன் ஹார்ட் சர்ஜரி என்று சொல்லப் படுகிற திறந்த இருதய சிகிச்சை என்று எண்ணுகிறேன். தற்பொழுது இதுபோல் திறந்த இருதய சிகிச்சை நடைபெறு கிறது. அந்த இருதய சிகிச்சையை ஏழை எளியவர்களுக்கு இலவசமாகத்தான் செய்யப்படுகிறது மாவட்டங்களிலே இது போன்ற நிலையங்கள் உருவாக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படி திறந்த இருதய அறுவை சிகிச்சைப் பிரிவை முதலில் மருத்துவக் கல்லூரி களில் இணைந்துள்ள மருத்துவ மனைகளில் அமைத்துவிட்டு, பின்னால் மாவட்டங்களில் விரிவுபடுத்துவதற்கு அரசு பரிசீலிக்கும். அடுத்து, தனியார் மருத்துவ மனைகளில் போடப்

படுகின்ற கட்டணங்கள்—சாதாரணமாக ஆபரேஷன் என்று சொல்லப்படுகிற அறுவை சிகிச்சைக்கு போடப்படுகிற கட்டணம் எந்த அளவுக்கு அதிகமாகப் போடுகிறார்கள், அதைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது அதில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளுமா என்று கேட்டார்கள். அதில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதற்கான எந்தவிதமான பரிசீலனையும் அரசினுடைய கவனத்தில் இல்லை. அவர்களை குறைக்கச் சொல்ல நம்மால் முடியுமா, அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்து அரசு முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருதய நோய் தடுப்புப் பிரிவு போன்ற மிக முக்கியமான பணிகளில், நரம்பு சிகிச்சை, இருதய சிகிச்சை போன்ற பிரிவுகளை மாவட்டங்கள் தோறும் ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது உடனடியாக இது போன்ற, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்ற பல்வேறு விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை உடனடியாக செய்வதற்கு இண்டன்ஸிவ் மெடிகல் கேர் என்ற பிரிவு ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் சிறப்புச் சிகிச்சை தேவை என்று நிலை வந்தால் அருகே இருக்கிற மருத்துவ மனையில் இயங்கிவருகிற இப்பிரிவை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியிலே உள்ள மருத்துவ மனை மாணவர்கள் படிக்கின்ற கல்லூரியாக இருப்பதால், அங்கே இப்படிப்பட்ட இருதய சிகிச்சைக்கான உயர்ந்த நிலையில் இருக்கக்கூடிய படிப்பினைக் கற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரசு உடனடியாக அங்கே இத்தகைய விசேஷப் பிரிவை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே அமுலில் இருக்கின்ற எல்லாவிதமான சிறப்புப் பகுதிகளும், தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளிலும் பரப்பப்பட்டு, அதனாலே கிராமப்புற மக்கள் பயனடைய வேண்டுமென்பது இந்த அரசினுடைய முக்கிய குறிக்கோளாகும். எனவே, ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு சிறப்புப் பகுதியாக இந்த ஆண்டு முதல் வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

1979 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 713, 714 ஆகிய இரண்டும் மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தள்ளி வைக்கப் படுகின்றன. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில்(*)உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து 41-வது விதியின் கீழ்....

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இரண்டு ஒத்தி வைப்புத் தீர் மானங்கள் கொடுத்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சிக்குள் நான் போக விரும்பவில்லை. துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு' அவர்கள் சாட்சியம் சொல்லக் கூடாத முறையில் இடைஞ்சல் செய்யும் வகையிலே, மருத்துவ மனையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டு, பிறகு அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக் கிறார்கள். எனவே இதைப் பற்றியெல்லாம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆய்விலே இருக்கிறது. என் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : நானும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதுவும் இதுவரை எடுத்துக் கொள்ளப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் கொடுத்திருப்பது கவன ஈர்ப்புத் தீர்மானம். 41-வது விதியின் கீழ்.....

திரு. மு. அம்பிகாபதி : ஒரு முக்கியமான விஷயம். தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் ஊழியர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் வீடுகளை காலி செய்யும் படி.......